**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**

**CC. No. 59/2016**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி- 7(PW-7)**-ன் வாக்குமூலம்** (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **ரெத்தினசாமி** | தொழில் | | **உதவி ஆய்வாளர் (ஓய்வு)** |
| த/பெ. | : | **சரவணவேல்** | ஊர் | | **பூதலூர்** |
| வயது | : | 63 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**23.10.2025**

**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை :**

**1)** நான் இறுதியாக செங்கிப்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன்.

2. கடந்த 25.05.2016-ஆம் தேதி 19.30 மணிக்கு திருக்காட்டுப்பள்ளி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, திருக்காட்டுப்பள்ளியை சேர்ந்த சங்கரசேகரபாண்டியன் என்பவர் கொடுத்த புகாரை பெற்று, அதன் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண்.123/2016, ச/பி. 419, 420 இதச கீழ் வழக்கு பதிவுசெய்து. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து வழக்கு கோப்பை ஆய்வாளர் வசம் விசாரணைக்காக வைத்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 20.05.2016 ஆம் தேதி நடந்ததாக சொல்லப்படும் வழக்கு சம்பவத்திற்கு 25.05.2016 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான காரணம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். துவாக்குடி காவல் நிலையத்தில் இருந்து வழக்கு சம்பவம் தொடர்பாக எனக்கோ, காவல் நிலையத்திற்கோ எவ்வித தகவல் கிடைக்கப்பெறவில்லை என்றால் சரிதான். போலி நகை மற்றும், போலி முகவரி கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ள சங்கதி தொடர்பாக நகையோ, ஆவணமோ, புகார்தாரரால் என் வசம் கொடுக்கப்படவில்லை என்றால்

சரிதான். அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை நான் உரிய முறையில் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.